சரிபார்க்கும் பட்டியல்

1. அடையாளத்திற்கான நிரூபணம் : வாக்காளர் அடையாள அட்டை /பாஸ்போர்ட்/ ஓட்டுநர் உரிமம் / பான் அட்டை / சான்றளிக்கப்பட்ட கையொப்பம் உரிமையாளரின் தற்போதைய வங்கியிடமிருந்து, இயக்குனரின் பங்குதாரர் (ஒரு நிறுவனமாக இருப்பின்)

2. முகவரிக்கான நிரூபணம் : சமீபத்திய தொலைபேசி கட்டண ரசீது, சமீபத்திய மின்சாரக் கட்டண ரசீது/ சொத்து வரி ரசீது / பாஸ்போர்ட் / வாக்காளர் அட்டை (உரிமையாளருடையது), இயக்குநர் /பங்குதாரர் (ஒரு நிறுவனமாக இருப்பின்)

3.வியாபார முகவரிக்கான நிரூபணம்

4. எந்த வங்கியிலும்/ நிதி நிறுவனத்திடமும் கடனைச் செலுத்தத் தவறியவராக இருக்கக் கூடாது

5.நிறுவனத்தின் ஒப்பந்ததாரர்கள் குறிப்பாணை மற்றும் நிறுவன அமைப்பின் விதிமுறைகள் / கூட்டாளிகளின் கூட்டாண்மை, கூட்டமைப்பு பற்றிய உடன்படிக்கை

6. சொத்து மற்றும் கடன் விவரங்கள் கடன் பெறுபவர் மற்றும் ஜாமீன்தாரர், அவர்களின் சமீபத்திய வருமான வரி அறிக்கை

7. வாடகை ஒப்பந்தம் (வாடகைக்கு வியாபார வளாகத்தை எடுத்திருந்தால்) மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து அனுமதி (பொருந்தினால்).

8. எஸ்எஸ்ஐ (SS1) / எம்எஸ்எம்இ(MSME) பதிவு (பொருந்தினால்)

9. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்புகள் - செய்பொருள் மூலதன வரம்புகளுக்கானவை. கால கடனுக்கான காலப்பகுதி முடிவடையும் வரையில் இது கொடுக்கப்பட வேண்டும்

10. முதன்மை மற்றும் இணையாக வழங்கப்படும் சொத்துக்களுக்கான குத்தகைப் பத்திரங்கள்,ஒப்பந்தம் / உரிமைக்கான ஆவணப் பத்திரம் - ஆகியவற்றின் நகல்கள்

11. விண்ணப்பதாரர் தாழ்த்தப்பட்ட/நலிந்த (எஸ்சி/எஸ்டி) பிரிவில் பொருந்துகிறாரா என்பதை உறுதிசெய்யும் ஆவணங்கள்.

12. நிறுவனத்தில் உள்ள பெரும்பான்மையான பங்குகள் எஸ்சி/எஸ்டி/பெண் போன்ற பிரிவினருக்குச் சொந்தமாக உள்ளதா (இவ்வாறு இருப்பின்) என்பதற்கான (ROC) கம்பெனிப் பதிவாளரிடமிருந்து பெற்ற சான்றிதழ்

25 லட்சத்திற்கும் மேலாக வெளிப்பாடு கொண்ட வகைகளுக்கு

13. நிறுவனம் பற்றிய அனைத்து விவரங்கள் (நிறுவனத்தின் முதலீட்டாளர் மற்றும் பங்குதாரர்களின் பெயர்கள், நிறுவனத்தில் உள்ள மற்ற இயக்குநர்கள், நடத்தப்படும் அனைத்து நடவடிக்கைகள் மற்றும் இயங்கும் தளங்கள், அலுவலகங்களின் முகவரிகள், பங்குதாரர் ஒவ்வொருவரும் நிறுவனத்தில் முதலீடு செய்திருக்கும் பங்கின் முறை)

14. அசோசியேட் / குரூப் கம்பனிகளின் கடைசி மூன்று ஆண்டுகள் இருப்புநிலை அறிக்கை (அவ்வாறு இருப்பின்)

15. வாங்கிய இயந்திரங்களின் விவரங்களைக் கொண்டிருக்கும் திட்ட அறிக்கை (கொள்முதல் திட்டம் தேவைப்பட்டால்), விற்பவர்கள் பற்றிய விவரம், அதற்கான விலை, இயந்திரங்களின் திறத் தன்மை, கிடைக்கக்கூடிய நிதி விவரங்கள், பயன்பாட்டுத் திறன், உற்பத்தி, விற்பனை, இலாபம், இழப்பு (இருக்குமானால்) மற்றும் இருப்புநிலைக் கடன், பணியமர்த்தப்பட வேண்டிய ஊழியர்கள் விவரம், நிதி விவரங்கள் போன்றவற்றை கணிக்கும் நேரத்தில் கருத்தில் கொண்டுள்ள அனுமானங்கள்

16. உற்பத்தி செயல்முறை (நிறைவேற்றப்பட்டால்), நிர்வாகிகளின் முக்கிய திறம் சார்ந்த விவரங்கள், எவர்களுடன் விற்பனைக்கான கூட்டு முயற்சி எடுக்கப் பட்டுள்ளது, பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் விற்பவர்கள், நிறுவனத்திடமிருந்து வாங்குபவர்களின் விவரங்கள், முக்கிய போட்டியாளர்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் இந்த நிறுவனத்தின் பலம் மற்றும் பலவீனங்கள் முதலியன

(சரிபார்க்கும் பட்டியல் முழுமையானதல்ல. எடுத்துக்காட்டும் தன்மை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும் கூடுதலாக உள்ளூர் தேவைகளைப் பொறுத்து தேவையானவை சேர்க்கப்படலாம்)